செ.வெ.எண்: 102/2017 நாள்: 07.02.2017

# மானியத்துடன் பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு

நமது மாநிலத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததை அடுத்து வரும் வறட்சியை எதிர்கொள்ள மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை கால்நடைகளின் நலன்கருதி எடுத்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக பசும்புல் தீவன பயிர் வளர்ப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நமது மாவட்டத்திற்கு 200 ஏக்கர் பரப்பளவு குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு விவசாயி குறைந்தது ஒரு ஏக்கர் பரப்பளவில் தீவனப் பயிர் பயிரிட ஏதுவாக ஏக்கருக்கு ரூ.2000 மானியமாக வழங்கப்படும். தீவனப்பயிர் சாகுபடி செய்வதற்கு தேவையான விதைகள் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் வழியாக வழங்கப்படும். விதைவிதைக்கப்பட்டு 20 நாட்களுக்கு பிறகு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும். சுமார் 50 முதல் 60 நாட்களுக்கு பின் அறுவடை செய்யப்படும் தீவனப் பயிர்கள் கால்நடை வளர்ப்போர்களுக்கு நேரடியாகவோ அல்லது பால் உற்பத்தியாளர் சங்கம் மூலமாகவே விற்பனை செய்யலாம். இத்திட்டத்தின்கீழ் தீவனப்பயிர் வளர்க்க விரும்பும் விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்களை அணுகும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மண்டல இணை இயக்குநர் (கூ.பொ)
கால்நடை பராமரிப்புத்துறை
கன்னியாகுமரி(இ)நாகர்கோவில்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**
**நாகர்கோவில்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.